

“குழந்தைகள்கிட்ட இருக்கிற கெட்டபழக்கங்களை உளவியல் நிபுணர்கள் ரெண்டு ஸ்டேஜா பிரிச்சுப் பார்ப்போம் (0 முதல் 3 வயசு வரை, 4 முதல் 7 வயசு வரை).

பிறந்த குழந்தைங்க முதல் 8 மாசம் வரைக்கும் நம்ம கவனத்தை அழுகை மூலமாதான் ஈர்க்கும். பசிக்காக அழுவுதா, தூக்கச் சொல்லி அழுவுதா, உச்சா போயிட்டு அழுவுதா, இல்ல சும்மா உங்க கவனத்தை தன் பக்கம் திருப்பறதுக்காக அழுவுதான்னு இப்ப இருக்கிற இளம் அம்மாக்களால கண்டுபிடிக்க முடியறதில்லை. அதுக்கு இதில் அனுபவப்பட்ட தலைமுறை ஆளுங்க வேணும்!




முதல் 8 மாசத்துக்கு அப்புறமா, ஒரு குழந்தை நிற்க, நடக்க, ஒரு பொருளைக் கேட்டு கத்தறது, பொருட்களை தூக்கிப் போட்டு உடைக்கறதுன்னு நிறைய நல்ல விஷயங்களையும் கொஞ்சம் சேட்டைகளையும் செய்ய ஆரம்பிக்கும்.

இதுல நான் சொன்ன சேட்டைகளை பொடிசுங்க செய்யறப்போ, 3 வயசு வரைக்கும் அதை பெற்றோர், தாத்தா-பாட்டின்னு வீட்ல எல்லாருமே ரசிப்போம்..

அதனால அந்தக் குழந்தைங்க, ‘தான் பொருளைத் தூக்கிப் போட்டு உடைக்கிறது acceptable behaviourனு நினைச்சிக்கிட்டு, அதை 5 வயசுலேயும் செய்யும்! ஆனா, அப்போ இதை நம்மால ஏத்துக்க முடியாது. ‘வளர்ந்துட்டான், ஸ்கூலுக்குப்போறான், இன்னமும் பொருட்களை தூக்கிப் போட்டு உடைக்கிறானே’ன்னு நமக்குத்தான் கோபம் வரும். ஸோ, பிள்ளையைத் திட்டறது, அடிக்கிறது, ‘அப்பாகிட்ட சொல்லி அடிவாங்கி வைப்பேன்’னு மிரட்டறதுன்னு ஆரம்பிப்பீங்க.

இதுல, யார் மேல தப்பு? எது சரி, எது தப்புனு அந்தக் குழந்தைக்குப் புரிய வைக்காம குழப்பினது யாரு? நீங்கதானே... ஒரு குழந்தையோட கெட்ட குணங்கள் இங்கேயிருந்துதான் ஆரம்பிக்குது. இதோட தொடர்ச்சிதான் பிடிவாதம், கோபம், ஷேர் பண்ணாதது, பொறுமையின்மை, ஏன் திருடுறது கூட.... சரி, இனி இவற்றுக்கான காரணங்கள் & தீர்வுகளைப் பார்க்கலாமா?

# குழந்தைகளிடம் இருக்கிற கெட்ட குணங்கள்...

## எப்படி சரிசெய்வது?

சொல்கிறார் 'உளவியல் நிபுணர்' சரஸ் பாஸ்கர்

### பிடிவாதம்



**என்ன காரணம்?**

'என் பிள்ளைக்கு எல்லாமே கிடைக்கணும்'னு நினைச்சுக்கிட்டு, அவன் கேட்கிற, பார்க்கிற, எல்லாப் பொருட்களையும் வாங்கிக் கொடுத்தா இப்படித்தான் பிடிவாதம் பிடிக்கும் பிள்ளைங்க.

**என்ன தீர்வு?**

குழந்தைப் பருவத்திலேயே அவங்களுக்கு 'நோ'ங்கிற வார்த்தையை அறிமுகப்படுத்துங்க. இதை பெற்றோர் செய்யத் தவறுவதால, பிற்காலத்தில் சின்ன ஏமாற்றத்தைக்கூட பொறுத்துக்க முடியாம, தற்கொலை செய்துக்கிறது, அல்லது தனக்குக் கிடைக்காத விஷயம் மத்தவங்களுக்குக் கிடைக்கக்கூடாதுன்னு லவ் பண்ணின பொண்ணு மேல ஆசிட் வீசறது, கொலை செய்றதுன்னு போயிடறாங்க. 'ரெண்டு பொருள் இருந்தா, அதுல ஒண்ணு கிடைக்கும், ஒண்ணு கிடைக்காமலும் போகலாம்'கிற யதார்த்தத்தை சின்ன வயசுலேயே குழந்தைக்கு மெதுமெதுவாப் புரிய வச்சிடுங்க.




**என்ன காரணம்?**

உங்க அனுபவம், உங்க வயசு, உங்க மெச்சூரிட்டி இதெல்லாம் தாண்டி குட்டியூண்டான ஒரு பிள்ளை, மேலே சொன்ன இயல்புகளோட உங்களை ஆட்டிப்படைக்குதுன்னா, உங்க தப்புன்னுதானே அர்த்தமாகுது? உங்க பிள்ளைங்க உங்களைப் பார்த்துதான் வளர்றாங்க, உங்ககிட்ட இருந்துதான் கத்துக்கிறாங்க. அதனால, மேலே சொன்ன மூணு கெட்ட குணங்களுமே அவங்களுக்கு உங்ககிட்டே இருந்துதானே போயிருக்கணும்!

**என்ன தீர்வு?**

குழந்தைங்க முன்னாடி கோபப்படாதீங்க, சண்டை போடாதீங்க. முக்கியமா, கோபத்துல கதவை படார்னு மூடுறது, போனை தரையில விட்டெறியறதுன்னு செய்யாதீங்க. வீட்ல இருக்கிறவங்க நிதானமா பேசி நடந்துக்குங்க.



## பெற்றோரை யூஸ் பண்ணும் பிள்ளைகள்...

**என்ன காரணம்?**

ஒவர் கண்டிப்பான அம்மா, ஒவர் செல்லம் தரும் அப்பா என்று ஒரு பிள்ளைக்கு அமைஞ்சா தான் இந்தப் பிரச்னை வரும். உதாரணத்துக்கு, குழந்தை, Tab கேட்டு அடம் பிடிச்சா (இன்னிக்கு 2 வயசுப் பிள்ளை Tab யூஸ் பண்ணுது), அம்மா மறுப்பாங்க. அப்பா, 'உனக்கு மட்டும் டிஸைனர் புடவை வாங்கிக்கிட்டியே...' என்று கால நேரம் புரியாமல் ஜோக்கடிப்பார். இந்த சூழ்நிலை அப்படியே குழந்தைகள் கண்முன் தொடர்ந்தால், ஒரு கட்டத்துல பிள்ளைகளுக்கு 'யாரை தாஜா பண்ணினா நம்ம கேட்டது கிடைக்கும்'கிற ஐடியா கிடைச்சுடும்.

**என்ன தீர்வு?**

பிள்ளைக்குத் தேவையானதை வாங்கிக் கொடுக்கிறதுல, கணவன்-மனைவி ரெண்டு பேரும் ஒத்த கருத்துல இருங்க. பொடிசுங்களால உங்களை யூஸ் பண்ண முடியாது.

## பொய் சொல்லும் பிள்ளைகள்... உண்மையை மறைக்கும் பிள்ளைகள்...



**என்ன காரணம்?**

ஒரு உண்மை என்னன்னா, குழந்தைங்களுக்கு, 'பொய் சொல்றது'ன்னு ஒரு விஷயம் இருக்கிறதே தெரியாது. ஒரு குழந்தை யதேச்சையா ஒரு பொருளை உடைச்சு, அதுக்கு நீங்க அடிச்சீங்கன்னு வச்சிப்போம். அடுத்த தடவை அதே தப்பைப் பண்ற குழந்தை, நீங்க அடிச்சிடுவீங்களோன்னு பயந்துகிட்டு, 'தான் அந்தப் பொருளை உடைக்கவே இல்லை'ன்னு மறைக்கும். நல்லா கவனிங்க, மறைக்கும்!. அதுக்குப் பேரு 'பொய்'னு நாமதான் அந்தக் குழந்தை மனசுல விஷத்தை விதைப்போம்.

**என்ன தீர்வு?**

பிள்ளைங்க உங்ககிட்டே, தான் செஞ்ச தப்பைக்கூட மனசுவிட்டு சொல்ற அளவுக்கு நீங்க விசாலமான மனசோட நடந்துக்கோங்க.

## திருடும் பிள்ளைகள்...



**காரணம்?**

எனக்கு வேணும், அதுவும் இப்பவே வேணும், அந்தப் பொருளை எனக்கு உடனே சொந்தமாக்கிக்கணும். இந்த உணர்வுகள் தான் ஒரு குழந்தையை, அது 'திருட்டு'னு தெரியாமலேயே திருட வச்சுடுது. இதோட நெகட்டிவ் சைடே அவங்களுக்குத் தெரியாது.

**தீர்வு...**

உங்க பிள்ளை தவறுதலா கடையில இருந்து, ஒரு பொருளை எடுத்துட்டு வந்திட்டா, பிள்ளையை கடைக்கு கூட்டிக்கிட்டுப் போய், 'நான் இதை என்னோடதுன்னு எடுத்துட்டுப் போயிட்டேன் அங்கிள். ஸாரி'ன்னு சொல்லி கடைக்காரர்கிட்ட அவனையே கொடுக்கச் சொல்லுங்க. அதுக்காக, அவனோட நேர்மையைப் பாராட்டி ஒரு சாக்லெட் வாங்கிக் கொடுங்க.

ஆனா, 'திருடுவியா... திருடுவியா?'ன்னு சொல்லிச் சொல்லி அடிச்சா, அந்த நேரத்துல பிள்ளை உங்க அடிக்கு பயந்துக்கிட்டு, 'பண்ண மாட்டேன்மா'ன்னு சொல்லும். ஆனா, அது குழந்தையின் வாழ்க்கை மொத்தத்துக்கும் உதவாது.


# நவீன மருத்துவ உலகில் பெண்களுக்கான எளிய சிகிச்சை வழிகள்





**பெண்களுக்கான கர்ப்பப்பை கீழ் உறுப்புகளுக்கான பிரச்சனைகள், சிறுநீரகப்பை பிரச்சனைகள், சிறுநீர் கட்டுப்படுத்த இயலாமை, அடிக்கடி மலம் கழித்தல், கர்ப்பப்பை இறங்குதல்.**

**மேற்கூறிய பிரச்சனைகள் தொடர்பான சிகிச்சை இன்றைய நவீன மருத்துவ உலகில் மிக எளிது.**

**பெண்களில் மூன்றில் ஒருவருக்கு இது போன்ற பிரச்சனைகள் ஏற்படலாம். எந்த வயதினரும் இந்த சிகிச்சையை மிக எளிதாக மேற்கொள்ளலாம்.**

CURE
CENTRE FOR URO GYNAECOLOGY RESEARCH & EDUCATION
Comprehensive Solutions For Women

நெ.113, 3வது தளம், ஸ்டெர்லிங் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.
போன் : **+91 9176193253 / +91 9841691424**
**E Mail : cureurogynae@gmail.com    Web : www.cureurogynae.com**



# சில பிள்ளைகள் யாரிடமும் ஒட்டாமல் இருப்பது ஏன்?

இந்தப் பிரச்னையை உளவியல் நிபுணர்கள் 3 வகையா பார்ப்போம். இதை ஒரு உதாரணத்தோட உங்களுக்குச் சொல்றேன்.

ஒரு வீடு... ஒரு அம்மாவும் குழந்தையும் அந்த வீட்ல இருக்காங்க. அம்மா புத்தகம் படிச்சுக்கிட்டு இருக்காங்க. குழந்தை ரிமோட் காரை வச்சி விளையாடிட்டு இருக்கு. அந்த நேரத்துல, பக்கத்து வீட்டுப் பெண், அந்த அம்மாக்கிட்ட பேச வர்றாங்க. அந்த அம்மாவும் பிள்ளையை வீட்டுக்குள்ள விட்டுட்டு, வாசல் வரைக்கும் போய் அந்தப் பெண்கிட்ட பேசி முடிச்சிட்டு வீட்டுக்குள்ள வர்றாங்க. வந்தவுடன், அந்தப் பிள்ளை ஓடி வந்து அம்மாவை கட்டிக்கொள்ளும். இதை நாங்க 'செக்யூர் அட்டாச்மென்ட்'னு சொல்வோம். இதுக்கு, 'நீ ஏன் என்னை விட்டுட்டு வெளியே போனே?'ன்னு அர்த்தம்.



இதுக்கு பதில், குழந்தை, தன் அம்மாவுடன் பேசிக் கொண்டிருக்கும் பக்கத்து வீட்டுப் பெண்ணை அடித்தாலோ அல்லது அம்மா வீட்டுக்குள்ள வந்தவுடன் அம்மாவை அடித்து விட்டு அழுதாலோ, அது 'இன்செக்யூர் அட்டாச்மென்ட்.' இதுக்கு, 'என்னை விட்டுட்டு இனிமே போவியா?' என்பது அர்த்தம்.

மூணாவது வகை ஒண்ணு இருக்கு. அம்மா வீட்டுக்குள் வந்தவுடனே, சுவர் மூலையில போய் நின்னுக்கிட்டு, வாயை மணி பர்ஸ் மாதிரி இறுக்க மூடிக்கும். அம்மா, 'என்னடா கண்ணு?' என்று கொஞ்சினாலும் பேசாது. பிள்ளை ரொம்ப வருத்தமா இருக்குன்னு இதுக்கு அர்த்தம். இதுக்குப் பேரு, 'அவாய்டட் அட்டாச்மென்ட்.'

இந்த 3 வகை பிள்ளைகளுமே, மத்தவங்ககிட்ட ஒட்டாமத்தான் இருப்பாங்க. இதுல உங்க பிள்ளை எந்த ஸ்டேஜ்ல இருக்குங்கிறதைத் தெரிஞ்சுக்கிட்டு, அதுக்கு ஏத்த மாதிரி ஸ்டெப் பை ஸ்டெப்பா மத்தவங்ககிட்ட பழக வையுங்க. மத்தவங்க மேல பிள்ளைக்கு நம்பிக்கையை ஏற்படுத்துங்க. தானாக இந்த பிரச்னை மறையும்.

இன்னொரு முக்கியமான விஷயம், 3 வயசுக் குழந்தைக்கு 2 வயசுக்கான IQ மற்றும் EQ இருந்தாலும் அவங்க தனிச்சு இருப்பாங்க.

## ஷேர் பண்ணாத பிள்ளைகள்...



**என்ன காரணம்?**

‘உன் பொருளை நீ தான் பத்திரமா வச்சுக்கணும்; உனக்கு வாங்கிக் கொடுத்ததை ஏன் உன்னோட ஃபிரெண்டுக்குக் கொடுக்கிறே!’, ‘இனி ரப்பரை தொலைச்சுட்டு பென்சிலை உடைச்சிட்டு வந்தேன்னா, அடி பின்னிடுவேன்!’ – இந்த மாதிரியெல்லாம் ஒரு குழந்தையை சுத்தியிருக்கிறவங்க பேசினா, அந்தக் குழந்தை எப்படி மற்றவங்களுக்கு எதையும் தரும்?

‘ஓ.. தன்னோட பொருள் உடையாம, தொலையாம இருக்கணும்னா, அதை யாருக்கும் கொடுக்காம பத்திரமா நாமளேதான் வச்சிக்கணும்!’னு பிள்ளைங்க முடிவெடுத்துடும்.

அதே மாதிரி, ‘யாருக்கும் எதையும் ஷேர் பண்ணக் கூடாது’ன்னு வளர்க்கப்படுற ஒரு பிள்ளை, ஷேர் பண்ணித்தான் சாப்பிடணும்னு வளர்க்கப்படுற பிள்ளை தரும் பொருட்களை வாங்கிக்கும். ஆனா, அது எதுவும் திருப்பித் தராது.. தான் தரணுமா இல்லையான்னு இந்த இரண்டு பிள்ளைகளுக்குமே பெரிய குழப்பம் வரும்.. இந்த மாதிரி சூழ்நிலையை எப்படி ஹேண்டில் பண்ணணும்னு உங்க பிள்ளைக்கு நீங்கதான் சொல்லித்தரணும்.

ஷேரிங் விஷயத்துல இன்னொரு முக்கியமான விஷயம் ஒண்ணு இருக்கு. ‘யாருக்கும் எதையும் கொடுக்கக் கூடாது’ன்னு வளர்க்கப்படுற ஒரு பிள்ளை, அது தப்புன்னு புரிஞ்சுக்கிட்ட பிறகு, ‘என் பொருள். அதை நான் யாருக்கு வேண்டுமானாலும் கொடுப்பேன்’னு பெற்றோரை எதிர்க்க ஆரம்பிக்கும்.

**என்ன தீர்வு...**

‘பகிர்ந்துண்டால் பசியாறும்’கிறதுதானே நம்ம கலாசாரம். அதை குழந்தைப் பருவத்துல இருந்தே சொல்லிக் கொடுங்க. நம்மோட ‘குறுகிய மனப்பான்மைகளை அடுத்த தலைமுறைக்கு கடத்தாம இருக்கிறதுதான் இதுக்கு நல்ல தீர்வு!

**– ஆ. சாந்தி, படம்: கே. கஸ்தூரி**


நலம் தரும் ஜோதிடம்



துயரத்தின் பிடியிலியிருக்கும் பலரும் இவர் பார்வைபட்ட பிறகு வாழ்க்கையின் உயர்ந்த நிலையை அடைந்து விடுகின்றனர்.

திருமண யோகம், குழந்தை பாக்யம், குடும்ப ஒற்றுமை, தொழில், உடல் நலம், வழக்கு, கடன், காணாமல் போனது அறிதல், கல்வி என சகலமும் அறியலாம்.

ஜாதகம் கணிக்கவும், அதிர்ஷ்டப் பெயர் சூட்டவும் அணுகலாம். ‘பிரசன்னம்’ பார்த்து பலன் அறியலாம். உங்கள் வாழ்வில் நீங்கள் சந்திக்கும் எந்த இடர்ப்பாடாக இருந்தாலும் பரிகாரம் பெற்று பூரண நிம்மதி பெற,

Prof.S. பஞ்சநாதன்
வாக்குச் சித்தர் ஜோதிட நிலையம்

எண் 8/27, 3rd மெயின் ரோடு,
(ஆஞ்சநேயர் super market எதிரில்),
தில்லை கங்கா நகர்,
நங்கநல்லூர், சென்னை – 600 061.
மற்றும்
1-B, ராஜன் தெரு,
ICICI Bank அருகில், தி.நகர்,
சென்னை – 600 017.

94444 53693
89395 09292
astrospanchanatthan@yahoo.in

ரகசியங்கள் ரகசியமாய் இருக்கும்!
தொலைபேசி மூலம் முன் அனுமதி பெற்று வருக

SATISFACTION GUARANTEED